செ.வெ.எண்:246 நாள்:16.04.2018

**திருநெல்வேலியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் ஊனமுற்றோருக்கான தேசிய நிறுவனத்தின் சார்பில் 1016 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.68.27 லட்சம் மதிப்பிலான உதவி உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் வழங்கினார்.**

-----

திருநெல்வேலி, பாளையங்கோட்டை வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் ஊனமுற்றோருக்கான தேசிய நிறுவனம், சென்னை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.04.2018) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்துகொண்டு 1016 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.68.27 லட்சம் மதிப்பிலான உதவி உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இவ்விழாவில் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாற்றுத்திறனாளிகளில் வாழ்க்கையில் ஒளி ஏற்றுவதை பெறுமையாக கருதி பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தினார்கள். தொடர்ந்து தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளின் ஒட்டு மொத்த வளர்ச்சியை கருத்தில் கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகிறது. 2013-14 ம் ஆண்டில் மாற்றுத்திறனாளிகளை பராமரிப்பதில் சிறந்த மாநிலம் என்ற தேசிய விருதை தமிழகம் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். மாற்றுத்திறனாளிகளின் நலன்களை பாதுகாக்கவும், அவர்களின் திறமையை சமுதாயத்திற்கு உணர்த்தி, பெறுமை சேர்க்கும் வகையில் உலக மாற்றுத்திறனாளிகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ம் தேதி கொண்டாப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டங்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு ஆரம்ப கால பயிற்சி, திருமண உதவி திட்டம், அரசு அலுவலகங்களில் சாய் தளப் பாதை, மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்குதல், சிறப்பு பள்ளிகள், சிறப்பு கல்விக்கான உதவி, வேலைவாய்ப்பில் 4 சதவீத இட ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு தடையற்ற சமூக சூழலை உருவாக்கி சமுதாயத்தில் சம வாய்ப்புகளை பெற்று ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவும் வகையில் செயல்பட்டு வருகிறது. அண்மையில் மாற்றுத்திறனாளி சகோதரர் திரு.மாரியப்பன் அவர்கள் உயரம் தாண்டுதலில் வெற்றி பெற்று நமது இந்திய தேசத்திற்கு பெறுமை சேர்த்துள்ளார். மாற்றுத்திறளாளிகள் நலத்துறை இன்னும் தனிதன்மையுடன் செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான அனைத்து வளர்ச்சி திட்டங்களையும் சிறப்பாக

செயல்படுத்தி வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் பெறுமைப்படுகிறேன். எனப் பேசினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான அரசின் அனைத்து திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை பெற சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2 மாதங்களுக்கு ஒரு முறை சிறப்பு மனுநீதி நாள் கூட்டம் நடத்தப்படுகிறது. செயற்கை அவையங்கள் வழங்கிட மாவட்டம் முழுவதும் சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. மாற்றுத்திறனாளிகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி, கடனுதவி பெறுதல் உள்ளிட்ட பல்வேறு உதவிகள் செய்யப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு அதிக அளவிலான வீட்டுமனை பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளது. பேருந்து பயன்பாடு குறித்து ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வரும் மாற்றுத்தினாளிகள் மற்றும் முதியோர்களை பேருந்து நிறுத்தத்திலிருந்து அழைத்துவர பேட்டரி கார் வசதி செய்யப்பட்டுள்ளது. இன்று மனவளர்ச்சி குன்றிய 9 பள்ளிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரம் வழங்கப்படுகிறது. மேலும் இவ்விழாவில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 316 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.38.93 லட்சம் மதிப்பிலும் சென்னை, ஊனமுற்றோருக்கான தேசிய நிறுவனத்தின் மூலம் 700 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.29.34 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மொத்தம் 1016 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.68.27 லட்சம் வழங்கப்படுகிறது. தொடர்ந்து மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பேசினார்.

அதனை தொடர்ந்து கலைபாண்பாட்டுத் துறையின் சார்பில் 2016-17 ஆம் ஆண்டுக்கு மாவட்ட அளவில் அகவை மற்றும் கலைப்புலமையின் அடிப்படையில் சிறந்த 10 கலைஞர்களுக்கு கலை இளமணி, கலை வளர்மணி, கலைச்சுடர்மணி, கலைநன்மணி மற்றும் கலைமுதுமணி ஆகிய விருதுகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி. சாந்தி குளோரி எமரால்டு, சென்னை NIEPMD முட்டுக்காடு, மறுவாழ்வு அலுவலர் திரு.குருமூர்த்தி, கலை பண்பாட்டுதறை உதவி இயக்குநர் திரு.சுந்தர், முடநீக்கியல் தொழில் நுட்பாளர் திரு.பிரபாகரன், முக்கிய பிரமுகர்கள் திரு.சுதாபரமசிவம், திரு.பரணிசங்கரலிங்கம், திரு.சுப்பையாபாண்டியன், திரு.கண்ணன் (எ) ராஜூ,திரு.நாராயண பெருமாள், திரு.சேர்மபாண்டி, திரு.ஆறுமுகம், திரு.பாளை கிருஷ்ணமூர்த்தி, திரு.தட்சை மாதவன், திரு.வேல்பாண்டி, திரு.மதியழகன், திரு.ராஜன் உட்பட அலுவலர்கள் மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.